# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## நடனம் I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி 1

1. கோயில் மணி அடித்தது. இதில் மணி அடித்தலை காட்ட பிரயோகிக்கும் முத்திரை
(1) சதுரம் (2) பிரமரம் (3) சிகரம் (4) பதாகம்

2. பல அடவுகளின் சேர்க்கை
(1) அடவு (2) தீர்மானம் (3) சொற்கட்டு (4) கோர்வை

3. நாட்டியத்தை கச்சேரி பாணியில் வகுத்தவர்
(1) சின்னையா (2) பொன்னையா (3) வடிவேலு (4) சிவானந்தம்

4. மண்டிய அடவு அமைந்த தாளம்
(1) ஆதி (2) ஜம்பை (3) ரூபகம் (4) ஏகம்

5. ப்ரமர விநியோகத்தில் கோகிலம் என்பதனை குறிக்கபயன்படும் சொல் எது
(1) புறா (2) மைனா (3) மயில் (4) குயில்

6. கிராமிய இசைக்கருவிகளில் ஒன்று
(1) வீணை (2) உடுக்கு (3) கிற்றார் (4) ஓர்கன்

7. கோர்வை பெரும்பாலும் முடிவுறும் அடவு
(1) நாட்டடவு (2) கிடதககதரிகிடதொம் அடவு
(3) தாதெய் தெய்தஅடவு (4) தட்டடவு

8. தத்தெய்தாம் அடவின் மறுபெயர்
(1) கோர்வைஅடவு (2) மகுடஅடவு (3)ஊஞ்சல் அடவு (4) வீச்சடவு

9. எசலபெரஹரா கொண்டாடும் இனத்தவர்
(1) சிங்களவர் (2) பறங்கியர் (3) தமிழர் (4) இஸ்லாமியர்

10. இலக்குமிக்குரிய முத்திரையை எடுத்துக் கொள்ளும் வேறு ஒரு தேவஹஸ்தம்
(1) சிவன் (2) பார்வதி (3) விநாயகர் (4) யமன்

11. காக்கை சிறகினிலே நந்தலாலா என்ற பாடலைப் பாடியவர்
(1) வள்ளுவர் (2) கம்பர் (3) இளங்கோ (4) பாரதியார்

12. பாட்டையோ, ஜதியினையோ தாளத்துடன் ஒரே நேரத்தில் ஆரம்பித்தல்
(1) அதீதஎடுப்பு (2) அநாகதஎடுப்பு (3) சமஎடுப்பு (4) விஷம எடுப்பு

13. வலது - முஷ்டி, இடது - சூசி ஹஸ்தங்களை எடுத்துக் கொள்ளும் நவக்கிரஹ ஹஸ்தம்
    (1) கேது (2) செவ்வாய் (3) சனி (4) புதன்

14. தமிழில் அழகர் குறவஞ்சி என்ற நாட்டிய நாடகத்தை இயற்றியவர்
    (1) கவிக்குஞ்சரமல்லன் (2) பொன்னையா
    (3) கவிக்குஞ்சரபாரதி (4) மகாகவிசுப்பிரமணியபாரதி

15. செல்வத்திற்கு அதிபதியாக விளங்குபவர்
    (1) பிரம்மா (2) இந்திரன் (3) நிருத்தி (4) குபேரன்

16. ஜாதி ஹஸ்தத்தில் பிராமணரை அபிநயிக்க பயன்படும் முத்திரை
    (1) சிகரம்,சிகரம் (2) சிகரம்,சதுரம் (3) பதாகம்,சிகரம் (4) பதாகம், முஷ்டி

17. பரத நாட்டியத்திற்குரிய உடை
    (1) பஞ்சாபி (2) பாவாடைசட்டை (3) பஞ்சகச்சம் (4) சேலை

18. எசல பெரஹரா கொண்டாடும் நாட்கள்
    (1) 60 (2) 70 (3) 80 (4) 90

19. இயற்கை அசைவுகளை அபிநயித்தலில் பொருத்தமற்றது
    (1) வாகனம் ஓடுதல் (2) பூக்கள் பூத்தல் (3) அலைஅடித்தல் (4) மரம் அசைதல்

20. திதிதெய் அடவு அமைந்த தாளம்
    (1) ரூபகம் (2) ஏகம் (3) ஆதி (4) ஜம்பை

(20×2 = 40புள்ளிகள்)

## பகுதிII

**விரும்பிய 4 வினாக்களுக்கு விடைதருக.**

1. (1) தெய்வங்களை குறிக்கும் ஹஸ்தங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   (2) அவை எத்தனை வகைப்படும்?
   (3) அவற்றுக்குரிய முத்திரைகளை ஒழுங்காக எழுதுக.

(2+2+11=15 புள்ளிகள்)

2. பின்வரும் முத்திரைகளுக்கு விநியோகம் தருக.
   1. காங்கூலம் 2. சதுரம் 3. பிரமரம்

(5×3=15 புள்ளிகள்)

3. (1) தாஹதஜெம் தரிதா அடவின் தாளம் யாது?
   (2) இவ் அடவின் பயன்படும் முத்திரைகள் எவை?
   (3) இவ் அடவின் நாட்டிய சொற்கட்டு யாது?
   (4) இவ் அடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

(1+2+3+9=15 புள்ளிகள்)

4. தஞ்சை நால்வர் கலைக்குஆற்றிய பணிகளை விளக்குக. (15 புள்ளிகள்)

5. சிறு குறிப்பு எழுதுக.
   1. கோர்வை 2. தீர்மானம் 3. எடுப்பு (5×3=15 புள்ளிகள்)

6. சூரன்போர்,அல்லது எசலபெரஹரா கொண்டாடும் முறை பற்றி உமக்கு தெரிந்தவற்றை எழுதுக (15 புள்ளிகள்)